Minutes of the **Public Hearing** conducted on **05.09.2023** at 11.00 A.M. at Selva Sumangali Mahal, Sayerpuram, Thoothukudi District for the proposed Rough Stone & Gravel Quarry namely **M/s. Golden Blue Metals Pvt Ltd Rough Stone and Gravel Quarry**, S.F.No. 451(p), 452 (p) & 453 (p) Kattalangulam Village, Thoothukudi Taluk, Thoothukudi District (Project-P1) over an extent of 4.95.0 Ha & **M/s. S Ramachandran Rough Stone and Gravel Quarry**, S.F.No. 429/1A, 429/2A & 429/2B, Kattalangulam Village, Thoothukudi Taluk, Thoothukudi District (Project-P2) over an extent of 3.87.0 Ha

**Participants:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. A. Marimuthu | Special District Revenue Officer (ISRO-Land Acquisition), Thoothukudi. |
| 2. | Thiru. J. Hamoneth Joesun, | District Environmental Engineer(i/c), Tamil Nadu Pollution Control Board, Thoothukudi. |
| 3. | Project Proponents and their representatives and the public | As per Attendance Register (A copy of the Attendance Register is attached in Annexure - II). |

At the outset, the District Environmental Engineer (i/c), Tamil Nadu Pollution Control Board, Thoothukudi welcomed the esteemed Special District Revenue Officer (ISRO-Land Acquisition), Thoothukudi, who was present to preside over the public hearing meeting and also welcomed the project proponent and their representatives and all the public who were present to attend the public hearing meeting and explained the purpose of the meeting and also about the project. The details about the project and the Environmental Management Plan proposed to be executed by the Project Proponent is explained on behalf of the Proponent by the Technical Consultant of the project. After this, the public expressed their views.

**I. Following are the views expressed by the public during the Public Hearing meeting:**

**1. Thiru. Jesu Mariyan, Ex President, Kattalangulam Panchayat Union.**

- The operation of these quarries will create employment generation.
- The quarries also contribute to revenue of the local panchayat, thereby basic needs of the village can be arranged properly.
- Already due to non-operation of quarries in Kattalangulam location for the last 5 years affected the revenue for the Panchayat
- Hence, I request to provide clearance for these projects.

**2. Tmt. Kalaiselvi, Thattarangulam village.**

- These quarries will create employment opportunities

- ❖ The quarries will be beneficial for satisfying the basic needs of the Panchayat such as road laying etc.

3. **Tmt. Jeyalakshmi, Kattalangulam village**

- ❖ We are taking water for Panchayat works from the quarries only and the quarries will be highly helpful to enhance our livelihood.

4. **Thiru. Arun, Kattalangulam village**

- ❖ I request to prioritize employment for Local persons.
- ❖ We are purchasing high-cost M-Sand and other construction materials from other places due to transportation cost and the same may get reduced due to the establishment of these quarries.
- ❖ These quarries create employment for locally available drivers and educated youths in the locality.
- ❖ I request to upgrade the village using quarry operation.

5. **Thiru. Marichelvam, Kattalangulam village**

- ❖ I request the quarries to ensure the local employment and public hygiene in the village.
- ❖ I request the quarries to provide rough stone and blue metals to local people in the Panchayat.

6. **Tmt. Padmavathy, Kattalangulam village**

- ❖ The quarries which are existing for many years in our locality have provided livelihood for many families.
- ❖ I request this quarry to function better.

7. **Tmt. Vattakkannu, Kattalangulam village.**

- ❖ I request this quarry to provide employment opportunities to local public.

8. **Tmt. Roselin, Kattalangulam village.**

- ❖ Quarries are good to be present
- ❖ I request the quarries to provide employment opportunities.

9. **Thiru. Karupasamy, Sayerpuram.**

- ❖ I recommended the proposed quarries as they will provide employment to local and the rate of construction materials will get reduce as quarries present near.

10. **Thiru. Murugesan, Thanoothu village.**

- ❖ Due to the arrival of these quarries, job opportunities for vehicle drivers and educated youths will be created.

11. **Thiru. Arun Kumar, Kattalangulam village.**

- ❖ Many educated and unemployed youths like me will get employment due to the arrival of this quarry.
- ❖ I welcome this quarry.

**12.Tmt. Balammal, Kattalangulam village**

- We are working in the quarry for generations.
- I request this quarry to function to provide employment to us.

**13 .Tmt. Pattukkani, Kattalangulam village.**

- We are suffering a lot due to loss of employment opportunities without the quarry.
- I request the quarries to provide rough stone and M-sand for local house constructions.

**II. Concluding remarks by the District Environmental Engineer (i/c).**

The District Environmental Engineer (i/c) consolidated about the support received regarding the establishment of quarries, such as employment opportunities for local drivers and educated youths, revenue to Panchayat, provision of basic needs to the local panchayat people. Then the meeting was concluded by thanking all those who have attended and said that the minutes of the meeting will be sent to State Environment Impact Assessment Authority (SEIAA) through the Tamil Nadu Pollution Control Board Head office.

**III.** The views/comments received from the public in writing (8 nos.) in support of this project are enclosed herewith (Annexure-III).

**IV.** The views/comments received in writing (03 nos.) through this office against the Projects are enclosed herewith. (Annexure-IV)

**The following documents are enclosed herewith in connection with the public hearing:**

1. Pen drive consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received for this project (Annexure – III).
4. The views/comments received in writing against this project is enclosed herewith (Annexure – IV).

12/09/2023

District Environmental Engineer(i/c),
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

12/9/2023

Special District Revenue Officer
(ISRO-Land acquisition),
Thoothukudi.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, கட்டாலங்குளம் கிராமம் புல எண்கள்: **451(p), 452 (p) & 453 (p)** - ல் உள்ளடக்கப்பட்ட **4.95.0** ஹெக்டேர் நிலப்பரப்பில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான தி/ள். கோல்டன் புளூ மெட்டல்ஸ் (பி) லிமிடெட் கல் மற்றும் சரளை குவாரி **(P1)** மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, கட்டாலங்குளம் கிராமம் புல எண்கள்: **429/1A, 429/2A & 429/2B** - ல் உள்ளடக்கப்பட்ட **3.87.0** ஹெக்டேர் நிலப்பரப்பில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான தி/ள். **S.** ராமசந்திரன் கல் மற்றும் சரளை குவாரி **(P2)** என்ற திட்டத்திற்கு 05.09.2023 காலை 11.00 மணிக்கு சாயர்புரத்தில் அமைந்துள்ள செல்வ சுமங்கலி மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள்:

பங்கேற்றவர்கள்:-

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.அ. மாரிமுத்து | தனி மாவட்ட வருவாய் அலுவலர்,<br>(ISRO நில எடுப்பு),<br>தூத்துக்குடி. |
| 2. | திரு.ஜே.ஹேமந்த் ஜோசன் எம்.டெக்., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(பொ),<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி<br>(வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

முதலாவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்த வருகை தந்த மதிப்பிற்குரிய தனி மாவட்ட வருவாய் அலுவலர், அவர்களையும், இத்தொழிற்திட்டத்தின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அனைத்து பொதுமக்களையும் வரவேற்று இந்த கூட்டம் நடைபெறவுள்ளதின் நோக்கத்தையும் இந்த திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். அதன்பின்பு இந்த திட்டம் பற்றி தொழிற்சாலையின் சார்பாக தொழில் நுட்ப விளக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது. பின்பு, பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

**I.**இந்த கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:

**1.** திரு. ஜேசு மரியான், முன்னாள் ஊராட்சி ஒன்றிய தலைவர், கட்டாலங்குளம்

- புதிதாக வரவிருக்கும் இந்த இரண்டு குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டால் இந்த ஊராட்சி பகுதிக்குட்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் ஊராட்சிக்கு வரும் வருவாயினால் ஊராட்சி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

- ஏற்கனவே இருந்த கல்குவாரிகள் ஐந்து வருடமாக இயங்காத காரணத்தால் இந்த ஊராட்சிக்கு தேவையான சாலை வசதிகள் மற்றும் பிற வசதிகள் செய்து தர முடியவில்லை.

❖ இப்போது இந்த புதிதாக வரவிருக்கும் இரண்டு குவாரிகள் செயல்பட்டால் ஊராட்சியின் வருவாய் அதிகரிக்கும் மற்றும் ஊராட்சி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படும், ஆகவே இந்த இரண்டு குவாரிகளுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. திருமதி கலைச்செல்வி, கட்டாலங்குளம் கிராமம்

❖ எங்கள் ஊரில் யாருக்கும் சரியான வேலைவாய்ப்பு இல்லை.

❖ எங்கள் ஊரில் இக்குவாரி அமைத்தால் எங்கள் ஊரை சுற்றியுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் மற்றும் எங்கள் ஊரில் சாலை வசதிகள் ஏற்படுவதற்கும் மற்றும் பஞ்சாயத்திலிருந்து எங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கும் இது நன்மை பயக்கும் விடயமாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

3. திருமதி. ஜெயலெட்சுமி, கட்டாலங்குளம் கிராமம்

❖ எங்களுக்கு ஊரக வேலை திட்டத்திற்கு இக்குவாரிகளிலிருந்து தான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆதலால் இந்த குவாரிகள் அமைந்தால் எங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் அதற்கு மிக்க நன்றி என தெரிவித்துள்ளார்.

4. திரு. அருண், கட்டாலங்குளம் கிராமம்

❖ இங்கு அமைய உள்ள குவாரியினால் கட்டாலங்குளம் கிராம பொது மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.

❖ நாங்கள் எம்-சாண்ட் முதலிய கட்டுமான பொருட்களை வெளியூரிலிருந்து பெறும் போது போக்குவரத்து செலவால் அதிக விலைக்கு வாங்க வேண்டியுள்ளது, இக்குவாரிகள் இங்கு அமைந்தால் எங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

❖ முக்கியமாக எங்களது கிராமத்தில் அதிகமாக வசிப்பது ஓட்டுநர்கள் தான், இந்த குவாரிகள் இங்கு அமைவதால் ஓட்டுநர் மற்றும் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க பெறும்.

❖ இந்த குவாரிகள் மூலம் எங்கள் கிராமத்தை மேம்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

5. திரு. மாரி செல்வன், கட்டாலங்குளம் கிராமம்.

❖ இந்த குவாரிகள் அமைவதால் கட்டாலங்குளம் ஊராட்சி மக்களுக்கு பொது சுகாதாரத்தை உறுதி செய்ய வேண்டும்.

❖ வேலைவாய்ப்புகள் உறுதி செய்ய வேண்டும்.

❖ உள்ளூர் மக்களுக்கு வீடுகள் கட்ட கட்டுமான பணிகளுக்கு ஜல்லி, மண் மற்றும் கல் ஆகியவை கிடைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

6. திருமதி. பத்மாவதி கட்டாலங்குளம் கிராமம்.

❖ எங்கள் பகுதிக்கு பல வருடங்களாக பல கல்குவாரிகள் இயங்குவதால் நிறைய மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது.

❖ எனவே இக்குவாரிகள் அமைவதற்கும் அதனை விரிவுபடுத்துவதற்கும் ஆதரவு தெரிவிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7. திருமதி. பட்டுக்கனி, கட்டாலங்குளம் கிராமம்.

- ❖ இந்த குவாரிகள் அமைவதால் எங்கள் ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் தர வேண்டி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

8. திரு. ரோஸ்லின், கட்டாலங்குளம் கிராமம்.

- ❖ இந்த குவாரிகள் அமைவதால் எங்களுக்கு நன்மையே.
- ❖ பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க பெற வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

9. திரு. கருப்பசாமி, கட்டாலங்குளம் கிராமம்.

- ❖ இந்த குவாரிகள் அமைவதால் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதாலும் குவாரிகள் அருகில் இருப்பதால் எம்-சாண்ட், கல் மற்றும் ஜல்லி முதலிய கட்டுமான பொருட்களின் விலை குறைவாக கிடைக்கும்.
- ❖ இக்குவாரி அமைவதால் எங்கள் கிராம மக்களின் மினி வாகனங்கள் போன்றவைகள் வாடகைக்கு எடுத்துச் செல்லப்படும். ஆகவே எங்கள் ஊர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே இக்குவாரிகள் அமைவதற்கு அனுமதி தர வேண்டுமென தெரிவித்துள்ளார்.

10. திரு. முருகேஸ்வரன், தன்னூத்து கிராமம்.

- ❖ இந்த குவாரிகள் வருகையினால் படித்த இளைஞர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என தெரிவித்துள்ளார்.

11. திரு. ஜெ. அருண்குமார், கட்டாலங்குளம் கிராமம்.

- ❖ தி/ள். கோல்டன் புளூ மெட்டல்ஸ் (பி) லிமிடெட் மற்றும் தி/ள். S. ராமசந்திரன் கல் மற்றும் சரளை குவாரி என்ற குவாரிகள் அமைவதால், என் போன்ற வேலையில்லாத படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
- ❖ இக்குவாரிகள் அமைவதால் எங்களுக்கு எவ்வித இடையூறுமில்லை, இக்குவாரிகள் அமைவதை நாங்கள் வரவேற்று முழு ஆதரவு அளிக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

12. திருமதி. பாலம்மாள், கட்டாலங்குளம் கிராமம்.

- ❖ நாங்கள் பல தலைமுறைகளாக குவாரிகளில் வேலை செய்து வருகிறோம்.
- ❖ எனவே இந்த குவாரிகளிலிருந்து எங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்.

13. திருமதி. பட்டுக்கனி, தன்னூத்து கிராமம்.

- ❖ குவாரிகள் இல்லாததால் எங்களது குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் சிரமப்படுகிறோம்.

❖ இந்த குவாரிகள் அமைவதால் எங்கள் குழந்தைகள் வீடு கட்டுமான பணிக்கு, எம்-சாண்ட், கல் மற்றும் ஜல்லி முதலியவை கிடைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**II.** மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) அவர்களின் நிறைவுரை

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) அவர்கள், பொதுமக்கள் குவாரிகள் அமைவதை ஆதரித்து கூறிய கருத்துக்களான வேலைவாய்ப்புகள், பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பெருகுதல், வேலைவாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை வழங்குதல், ஓட்டுநர்களின் வேலைவாய்ப்புகள் அதிகரித்தல் மற்றும் கட்டுமான பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கப்பெறுதல் போன்ற கருத்துகள் அனைத்தும் உள்ளபடியே பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

**III.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய ஆதரவு தெரிவித்து எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் (8 Nos) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – III).

**IV.** இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் (3 Nos). (இணைப்பு – IV)

**பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கையுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறுந்தகடுகள் (எண்ணம் - 2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. இந்த திட்டம் அமைவதை வரவேற்று எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.
4. இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து இந்த கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்யகோரி எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனு இணைப்பு IV- ல் இணைக்கப்பட்டுள்ளது.

12/09/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

12/9/2023

தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
(ISRO நில எடுப்பு),
தூத்துக்குடி.